**செய்தி வெளியீடு எண். 64/08/2019**

# சென்னை பெருநகர போக்குவரத்து காவல்

## பத்திரிகைச்செய்தி –14.08.2019

அதிகரித்து வரும் வாகன விபத்துக்களால் அதிக அளவிலான உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. குறிப்பாக இருசக்கர வாகன ஓட்டிகள், நான்கு சக்கர வாகன ஓட்டிகள், பாதசாரிகள் என பலதரப்பட்ட மக்கள் விபத்துக்கு உள்ளாகி உயிரிழக்கின்றார்கள். பெரும்பாலான வாகன விபத்துக்களில் தலைக்கவசம் அணியாமல் வாகனத்தை ஓட்டுவது, சீட் பெல்ட் அணியாமல் வாகனத்தை ஓட்டுவது, அதிவேகமாக வாகனத்தை ஓட்டுவது , மது அருந்திவிட்டு வாகனத்தை ஓட்டுவது, என பல்வேறு போக்குவரத்து விதிமீறல்களில் ஈடுபடுவதால் சாலை விபத்துக்கள் ஏற்படுகின்றது.

இவ்வாறான போக்குவரத்து விதிமீறல்களுக்கு விதிக்கப்படும் அபராதத் தொகை குறைவாக உள்ளதால் போக்குவரத்து விதிமீறல்களில் ஈடுபடும் வாகன ஓட்டிகள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. எனவே சாலை விபத்துகளையும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகளை தடுக்கவும், போக்குவரத்து விதிமீறல்களில் ஈடுபடும் வாகன ஓட்டிகள் சாலை விபத்துகளை கடைபிடிக்க செய்யவும், மோட்டார் வாகன சட்ட திருத்த மசோதா–2019 அரசால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் அதிக அளவில் நடைபெறும் போக்குவரத்து விதி மீறலுக்கான புதிய அபராத தொகை கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

| மோட்டார் வாகன சட்டப் பிரிவு | போக்குவரத்து விதிமீறல் | தற்போது விதிக்கப்படும் அபராத தொகை | புதிய அபராத தொகை |
|---|---|---|---|
| 177 | போக்குவரத்து விதிமுறைகளுக்கான பொது அபராதம் | ரூபாய்.100 | ரூபாய். 500 |
| New 177A | சாலை ஓழுங்குமுறை விதிகளை மீறுதல் | ரூபாய்.100 | ரூபாய். 500 |
| 178 | பயனச்சீட்டு இல்லாமல் பயனம் செய்வது. | ரூபாய். 200 | ரூபாய். 500 |
| 179 | போக்குவரத்து அதிகாரிகளின் உத்தரவை மீறுவது. | ரூபாய். 500 | ரூபாய். 2000 |
| 180 | அங்கீகாரமின்றி உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டுதல் | ரூபாய்.1000 | ரூபாய். 5000 |
| 181 | உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டுதல் | ரூபாய். 500 | ரூபாய். 5000 |
| 182 | தகுதியிழப்பு செய்த பின்னர் வாகனத்தை ஓட்டுதல் | ரூபாய். 500 | ரூபாய்.10,000 |
| 182 B | நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட பெரிய வாகனம் | புதியது | ரூபாய். 5000 |
| 183 | அதிவேகமாக வாகனத்தை ஓட்டுதல் | ரூபாய். 400 | ரூபாய்.1000 for LMV<br>ரூபாய். 2000 for நடுத்தர பயணிகள் வாகனம். |
| 184 | ஆபத்தான வகையில் வாகனத்தை ஓட்டுதல் | ரூபாய்.1000 | ரூபாய். 5000 வரை |
| 185 | மது அருந்திவிட்டு வாகனத்தை ஓட்டுதல் | ரூபாய். 2000 | ரூபாய்.10,000 |
| 189 | சாலைகளில் வேகமாக / பந்தயத்தில் ஈடுபடுவது | ரூபாய். 500 | ரூபாய். 5,000 |
| 192 A | அனுமதி (பர்மீட்) இல்லாமல் வாகனத்தை ஓட்டுதல் | ரூபாய். 5000 வரை. | ரூபாய்.10,000 வரை |
| 193 | முகவர்கள் (உரிமம் தொடர்பான விதிமீறல்கள்) | New | ரூபாய். 25,000 to ரூபாய்.1,00,000 |
| 194 | வாகனங்களில் அதிக அளவில் சுமை ஏற்றுதல் | ரூபாய். 2000 மற்றும் ரூபாய்.1000 ஒவ்வொரு கூடுதல் டன் எடைக்கும். | ரூபாய். 20,000 மற்றும் ரூபாய். 2000 ஒவ்வொரு கூடுதல் டன் எடைக்கும். |
| 194 A | அதிக அளவில் பயணிகளை ஏற்றுதல் | | ரூபாய்.1000 ஒவ்வொரு கூடுதல் பயணிகளுக்கும். |

| | | | |
|---|---|---|---|
| 194 B | சீட் பெல்ட் | ரூபாய்.100 | ரூபாய்.1000 |
| 194 C | இருசக்கர வாகனத்தில் அதிக அளவில் பயணிகள் | ரூபாய்.100 | ரூபாய். 2000, ஓட்டுநர் உரிமம் 3 மாதங்கள் தகுதியிழப்பு செய்யப்படும். |
| 194 D | தலைக்கவசம் | ரூபாய்.100 | ரூபாய்.1000 . ஓட்டுநர் உரிமம் 3 மாதங்கள் தகுதியிழப்பு செய்யப்படும். |
| 194 E | ஆம்புலன்ஸ் மற்றும் அவசர சேவை வாகனங்களுக்கு வழிவிடாமல் இருத்தல் | New | ரூபாய்.10,000 |
| 196 | காப்பீடு இல்லாமல் வாகனத்தை ஓட்டுதல் | ரூபாய்.1000 | ரூபாய். 2000 |
| 199 | சிறார்கள் புரியும் போக்குவரத்து விதிமீறல்கள் | New | காப்பாளர் / வாகன உரிமையாளர் குற்றவாளியாக கருதப்படுவார். ரூபாய். 25,000 அபராதம் மற்றும் 3 ஆண்டுகள் சிறை. சிறார்கள் Juvenile Justice Act படி நடவடிக்கை. வாகனத்தின் பதிவு ரத்து செய்யப்படும். |
| 206 | ஆவணங்களை பறிமுதல் செய்ய அதிகாரிகளுக்கு உள்ள அதிகாரம். | | ஓட்டுநர் உரிமம் ரத்து u/s 183,184,185,189, 190,194C,194D,194E |
| 210 B | போக்குவரத்து விதிகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளின் போக்குவரத்து விதிமீறல்கள் | | சட்டப்ரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராத தொகையின் இருமடங்கு அபராதம் |

மேற்கண்ட புதிய அபராத தொகை சென்னை பெருநகரில் அமல்படுத்தப்படுகிறது. எனவே வாகன ஓட்டிகள் சாலை விதிகளையும் சட்டத்தையும் மதித்து அவற்றைக் கடைப்பிடித்து போக்குவரத்து விதிமீறல்களில் ஈடுபடாமல் இருக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

••••••